**மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை: திருமதி. ஜி.எம். வசந்தி, எம்.எல்.,

முழுக் கூடுதல் பொறுப்பு மாவட்ட அமர்வு நீதிபதி, நாகப்பட்டினம்

(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

**2026ம் ஆண்டு ஜூலை மாதம் 02ம் நாள் - வியாழக்கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனி 18-ம் நாள்

**கு.ப.ம.எண்.549/2026**

அஞ்சப்பன், வயது 76/2026, த/பெ செம்பன் ..... மனுதாரர்/ எதிரி

-எதிர்-

காவல் ஆய்வாளர், வேதாரண்யம் காவல்நிலையம்,
குற்ற எண் 168/2026 ......எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இன்று (02.07.2026) விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் திரு. வி. சந்திரசேகரன் மற்றும் எதிர்மனுதாரரின் எழுத்துப்பூர்வ பதிலுரை ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.....

**// உத்தரவு//**

இம்மனு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண். 168/2026-ல் சட்டப்பிரிவுகள் 296(பி), 118(1), 351(3), 109 BNSன் கீழான குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ள மனுதாரர்/குற்றம் சாட்டப்பட்டவரால் பிணை கோரி பிரிவு 483 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் நிரபராதி என்றும், மனுதாரர் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 24.06.2026 அன்று கைது செய்யப்பட்டு 09 நாட்களாக நீதிமன்றக்காவலில் உள்ளார் என்றும், இது முதல் பிணை மனு என்றும், மனுதாரர் இந்த நீதிமன்றம் விதிக்கும் எந்தவொரு நிபந்தனைக்கும் கட்டுப்பட தயாராக உள்ளார்கள் என்றும், மனுதாரருக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிடவேண்டும் என்று கோரினார்.

3. எதிர்மனுதாரரின் எழுத்துப்பூர்வ பதிலுரையில் கடந்த 24.06.2026ம் தேதி எதிரி தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பனங்கள்ளை சட்டவிரோதமாக இறக்கி விற்பனைக்கு வைத்திருந்தபோது புகார்தாரர் அதனை திருட்டுதனமாக குடித்துவிட்டதால் எதிரி அவரை கண்டிக்க புகார்தாரரின் வீட்டுக்கு சென்றபோது புகார்தாரர் தான் குடிக்கவில்லை என கூறியதால் எதிரி கத்தியால் புகார்தாரரை வெட்ட முட்பட்டபோது புகார்தாரர் அதை தடுத்ததால் புகார்தாரரின் இடது கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டு அவரை கொலை செய்ய முயற்சித்துள்ளார் என்றும், காயம்பட்ட புகார்தாரர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிவிட்டார் என்றும், எதிரி மீது 06 குற்ற முன்வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றும், இவ்வழக்கு புலன்விசாரணை நிலுவையில் உள்ளது என்றும், எனவே எதிரியை பிணையில்விட்டால் வழக்கின் சாட்சிகளை கலைக்கக்கூடும் என்றும், மீண்டும் இதுபோன்ற குற்றச்செயலில் ஈடுபட வாய்ப்புள்ளது என்று கூறி எதிரியை பிணையில்விட கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் மீது சட்டப்பிரிவு 296(பி), 118(1), 351(3), 109 BNSன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு கொலைமுயற்சி வழக்காகும். காயம்பட்ட புகார்தாரர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிவிட்டார். எதிரி மீது 06 குற்ற முன்வழக்குகள் நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கில் 24.06.2026 அன்று மனுதாரர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக்காவலில் உள்ளார். எனவே எதிரி மூத்த குடிமகன் என்பதாலும் மற்றும் அவர் சிறையில் இருந்த காலத்தை கருத்தில்கொண்டு, இந்த நீதிமன்றம் மனுதாரருக்கு நிபந்தனைகளுடன் ஜாமீன் வழங்கி உத்தரவிடுகிறது.

முடிவில், இம்மனு நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டு, மனுதாரரரை ஜாமீனில் விடுவிக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் மனுதாரர் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மதிப்பிலான பிணையப் பத்திரத்தையும், அதே தொகைக்கு இரு தனிப் பிணையாளர் (surety) பிணையத்தையும், **வேதாரண்யம், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவரின்** திருப்திக்குட்பட்டு தாக்கல் செய்ய வேண்டும். பிணைதாரர் (Surety) தனது நிழற்படத்தையும், இடது கை பெருவிரல் ரேகையையும் பிணைப் பத்திரத்தில் பதிக்க வேண்டும். மேலும், பிணைதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, அவருடைய ஆதார் அட்டை அல்லது வங்கி சேமிப்புப் புத்தகத்தின் நகலை நீதிபதி பெற்றுக்கொள்ளலாம்.

1. மனுதாரர் சிறையிலிருந்து விடுதலையான தேதியிலிருந்து 30 நாட்களுக்கு தினமும் காலை 10.00 மணிக்கு சம்மந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திடவேண்டும்.

2. விசாரணை நீதிமன்றத்தில் அல்லது காவல்துறை முன், அவர்கள் அழைக்கும் போதெல்லாம் நேரில் ஆஜராக வேண்டும்.

3. வழக்கில் தொடர்புடைய சாட்சியங்களை கலைக்கவோ, மிரட்டவோ, அல்லது சாட்சிகளைப் பாதிக்கக்கூடிய எவ்வித செயல்களிலும் ஈடுபடக்கூடாது.

4. மனுதாரர் விசாரணை அல்லது வழக்கின் விசாரணையின் போது தலைமறைவாகக் கூடாது.

5. ஜாமீனில் இருக்கும் காலத்தில் வேறு எந்த குற்றச் செயல்களிலும் ஈடுபடக்கூடாது.

இன்று (02.07.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

G M VASANTHI
Digitally signed by G M VASANTHI
Date: 2026.07.02 05:13:34 +0530

மாவட்ட அமர்வு நீதிபதி (முகூபொ)
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)
நாகப்பட்டினம்.

நகல்
1. மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வேதாரண்யம்.
2. திரு. வி. சந்திரசேகரன், வழக்கறிஞர், நாகப்பட்டினம்.